# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை 2015

# ANNUAL PERFORMANCE REPORT

**පරිවාස හා ළමාරක්ෂක සේවා දෙපාර්තමේන්තුව**
බී කොටස, 3 වන මහල, සෙත්සිරිපාය II වන අදියර, බත්තරමුල්ල.

**நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்**
பீ பிரிவு, 3 ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை.

**Department of Probation and Child Care Services**
**Section B, 3rd Floor, Stage II, Sethsiripaya, Battaramulla.**

# செயலாற்றுகை அறிக்கை - 2015

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்
பீ பிரிவு, 3 ஆம் மாடி, செத்சிறிபாய கட்டடம் II, பத்தரமுல்லை.

## 1. அறிமுகம்

2015 ஆம் ஆண்டு நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் இந்த அறிக்கையில் மீளாய்வு செய்யப்படுகின்றது.

## 1.1 திணைக்களத்தின் வரலாறு

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டுகளில் இலங்கையின் நீதிமன்றத்தினால் நன்னடத்தை முறை பரீட்சார்த்தமாக அமுல்படுத்தப்பட்டது. 1907 இல் இங்கிலாந்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட தவறாளிகள் தொடர்பான நன்னடத்தை கட்டளைச் சட்டம் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் தொடர்பிலும் தாக்கம் செலுத்தியது. 1944 இல் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட 22 ஆம் இலக்க நன்னடத்தை கட்டளைச் சட்டமானது மேலே குறிப்பிடப்பட்ட தாக்கங்களின் பெறுபேறாகும். இந்தக் கட்டளைச் சட்டத்தின் மூலம் நன்னடத்தை முறை இலங்கை நீதிமன்றங்களிலும் அமுலுக்கு வந்தது.

இங்கிலாந்தின் நன்னடத்தைச் சேவைகள் ஊடாக இலங்கையிலும் நன்னடத்தைச் சேவைகளை ஆரம்பிக்கும் செயற்பணி, இங்கிலாந்தின் மதியுரையாளரொருவரான திரு எச்.ஏ. லீடீனிடம் பொறுப்பளிக்கப்பட்டதுடன், அதற்கமைய சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட நன்னடத்தைச் சேவைகள், நன்னடத்தை அலுவலர்கள் சிலர் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. பரீட்சார்த்தமாக நாட்டிலுள்ள ஒரு சில நீதிமன்ற பிரிவுகளில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் இந்த சேவை நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனையடுத்து இச்சேவையை மேம்படுத்த வேண்டிய தேவையும் எழுந்தது.

1949 இல் நீதிபதி திரு கிறேசியனின் தலைமையில் நியமனம் செய்யப்பட்ட குழுவின் சிபாரிசுள் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து நாடு முழுவதும் சகல நீதிமன்ற வலயங்களும் உள்ளடக்கப்படும் வகையில் நன்னடத்தைச் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இந்த சேவையின் நிர்வாக நடவடிக்கைகள் சிறைச்சாலை மற்றும் நன்னடத்தைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

சிறுவர், இளைஞர் கட்டளைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் சிறுவர் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சிறுவர்களுக்கு ஆற்றப்படுகின்ற சேவைகளை ஒன்றுதிரட்டுவதன் முக்கியத்துவம் தொடர்பாக திரு சிறில் ஹெம்லீனின் அறிக்கையினூடாக சுட்டிக்காட்டப்பட்டது. மேற்படி சிபாரிசுக்கு அமைய 1956 அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு 1956 இல் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களம் முதலில் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அடிக்கடி பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இதனைக் கொண்டு வந்தனர். 1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இது மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 1994 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் சுகாதார, பெருந்தெருக்கள், சமூக சேவைகள் அமைச்சின் கீழும், 2001 ஆம் ஆண்டில் சமூக சேவைகள், மீனவர் சமுதாய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2002 இல் சுகாதார போசாக்கு, நலன்புரி அமைச்சின் கீழும், 2003 இல் சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 2004 ஆம் ஆண்டில் மகளிர் அபிவிருத்தி, சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 2005 ஆம் ஆண்டு முதல் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2010 ஆம் ஆண்டு மதல் இதுவரைகாலம் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் கீழும் 2015 ஆம் ஆண்டிலிருந்து மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின்கீழும் இந்தத் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது.

## 1.2 மாகாண சபைகள் தாபிக்கப்பட்டமையும், திணைக்களத்தின் அதிகாரங்களும்.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட

பின்னர் தடுப்பு இல்லங்கள், சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள், நன்னடத்தை அலுவலகங்கள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களின் நடவடிக்கைகள் நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் விஸ்தரிக்கப்பட்டதுடன், நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் உதவி ஆணையாளர்கள், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்கு உதவுவதற்காக

நியமனம் செய்யப்பட்டார்கள்.

1987 இன் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அமுலுக்கு வந்ததையடுத்து, மேற்படி ஒழுங்கமைப்பு மாற்றமடைந்ததுடன், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவை மாகாண சபைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டது. அத்துடன் அதுவரை ஆணையாளருக்கு உதவுவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த உதவி ஆணையாளர் பதவிகளும்

ரத்துச் செய்யப்பட்டன.

மாகாண சபைகளின் கீழ் மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர்கள் சகல மாகாணங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டார்கள் என்பதுடன், நன்னடத்தை அலுவலகங்கள் அவர்களின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.

1991 ஆம் ஆண்டு இலங்கை சிறுவர் உரிமைகள் பற்றிய பூகோலப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டதுடன், 1992 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது. மேற்படி சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் காணப்படுகின்ற யாப்புக்களை அமுல்படுத்த வேண்டியதன் தேவைக்காக 1999 ஆம் ஆண்டு திணைக்களத்தினால் தமது வெளிக்கள கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதை நோக்காகக் கொண்டு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் எனும் புதிய பதவி உருவாக்கப்பட்டு அதற்கு அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள். தற்போது இவர்கள் நாடு முழுவதும் அமைந்துள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்றனர். இதனூடாக நன்னடத்தை விடயம் மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயத்திற்கு முன்னுரிமை வழங்கி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

## 1.3 எமது நோக்கு

சிறுவர்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட்டதும், அவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமானதும் சமூகம்

## 1.4 எமது செயற்பணி

தேசிய கொள்கைகள், சர்வதேச நியமங்களுக்கு அமைய அநாதைகள், கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்களையும் சட்ட ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களையும் விசேடமாகக் கொண்டு சகல சிறுவர்களினது உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு சமமான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தல்.

## 1.5 எமது பெறுமானங்கள்

- சிறுவர்களை அடிப்படையாகக் கொள்ளல்
- பாசம், கருணையை அடிப்படையாகக் கொள்ளல்
- ஒத்துழைப்பு அணுகுமுறை
- சிறந்த அர்ப்பணிப்பு
- நல்லிணக்கம்

1

- சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்
- அநாதைகள், கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
- சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதற்கும், உறுதி செய்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சம்பந்தப்பட்ட அமைச்சுக்களையும், மாகாண சபைகளையும் ஒருங்கிணைப்புச் செய்து அவர்களது சிபாரிசுகளின் அடிப்படையில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சட்டங்களை தேசிய மற்றும் சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்புடையவாறு திருத்தியமைத்தல்.
- மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப அறிவையும், சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுத்தல்.
- சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- தற்போதுள்ள உள்ளக சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவ முறைகளை மேம்படுத்தல்.
- மக்களின் தேவைகளுக்கு திருப்திகரமான வாறு வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றல்
- வினைத்திறனுடன் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடியவாறான பதவியணியொன்றைப் பயிற்றுவித்தல்.

## 1.7

- ❖ மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு
- ❖ வெளிநாட்டு தத்தெடுத்தல்கள்
- ❖ சிறுவர்களின் கல்வி உரிமைகளை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்
    - செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டத்தின் மூலம் அநாதரவான சிறுவர்களுக்குத் தேவையான நிவாரணங்களைச் செய்து கொடுத்தல்
    - நெனதிறிய புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிவாரணங்களை அமுல்படுத்தல்
    - கெப்பக்கரு தெகுரு பெற்றோர் பாதுகாவளர் உதவித் திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கு கல்வி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- ❖ சிறுவர் உரிமைகளை உறுதி செய்வதற்கான சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டல்.
- ❖ சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்வதற்கான சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- ❖ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்
- ❖ ஆலோசனை அவசியமான, சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டள்ள சிறுவர்களுக்காக பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவை தேசிய நிலையத்தை பேணிவருதல்

## 1.8 திணைக்கள ஒழுங்கமைப்பும், பதவியணியினரை ஈடுபடுத்தலும்

இலங்கை நிருவாக சேவைக்கு உரித்தான பிரதி மற்றும் உதவி ஆணையாளர், கணக்காளர், சட்ட அலுவலர், நிர்வாக அலுவலர், நன்னடத்தை அலுவலர்கள் இருவர் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் இருநூற்று முப்பத்து நான்கு பேரை உள்ளடக்கிய பதவி நிலைத்தரத்தைச் சேர்ந்த பதவியணியினரின் உதவியுடன் ஆணையாளர் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் செயற்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டுள்ளார்.
திணைக்கள ஒழுங்கமைப்புக்கு உட்படும் பிரிவுகளாவன:

1. தாபன மற்றும் நிர்வாகப் பிரிவு
2. கணக்குகள் பிரிவு
3. நன்னடத்தைப் பிரிவு
4. அபிவிருத்திப் பிரிவு
5. பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையம்.
6. செவண சரண செயலகம்.

திணைக்களத்தின் சகல பதவியணியினரும் உச்சளவான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். ஒட்டுமொத்த பதவியணி 487 பேரைக் கொண்டுள்ளதுடன், இது பின்வருமாறு அமைந்துள்ளது.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட | தற்போதுள்ள |
|---|---|---|
| ஆணையாளர் (இ.நி.சே.) | 01 | 01 |
| பிரதி / உதவி ஆணையாளர் (இ.நி.சே.) | 02 | 01 |
| உதவி ஆணையாளர் (திணைக்கள) | 01 | - |
| கணக்காளர் | 01 | 01 |
| சட்ட அலுவலர் | 01 | - |
| நிர்வாக அலுவலர் | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 02 | 01 |
| நன்னடத்தை அலுவலர் | 02 | 01 |
| புள்ளிவிபர அலுவலர் | 01 | - |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் | 424 | 232 |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் | | 156 |
| அபிவிருத்தி அலுவலர் | 12 | 09 |
| உளவியல் ஆலோசகர் | 02 | - |
| தகவல் தொழில்நுட்பவியல் அலுவலர் | 01 | - |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | 14 | 09 |
| சுருக்கெழுத்தாளர் | 01 | 01 |
| முறைசாரா கல்வி ஆலோசகர் | 01 | 01 |
| உதவி வோர்டன் | 03 | 03 |
| சாரதி | 04 | 04 |
| அலுவலக சிற்றூழியர் சேவை | 10 | 08 |
| சமையற்காரர் | 02 | 02 |
| துப்பரவேட்பாட்டு தொழிலாளி | 01 | - |
| மொத்தம் | 487 | 430 |

## 2. தாபன மற்றும் நிர்வாகப் பிரிவு

### 2.1 தாபன மற்றும் நிர்வாகப் பிரிவின் பிரதான செயற்பணி

- திணைக்களத்தின் பதவியணியினர் தொடர்பான தாபன நடவடிக்கைகள்.
- நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தொடர்பான புதிய பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்தல், இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்.
- திணைக்கள பதவியணியினரின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் தேர்ச்சி மட்டங்களை பரீட்சிப்பதற்கான பரீட்சைகளை நடாத்தல்.
- சகல பதவியணியினருக்கும் முறையான பயிற்சியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

திணைக்களத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் போது உள்ளக பதவியணியினரிடம் காணப்படுகின்ற அறிவை மென்மேலும் வளர்ப்பதற்கும், புதிய அபிவிருத்தி உபாயமுறைகளை அறிமுகம் செய்வதற்கும், புதிய பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் மற்றும் பதவியணியினருக்குத் தேவையான பயிற்சிகளையும், அறிவையும் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய,

- திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் காணப்பட்ட வெற்றிடங்களுக்கு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் 10 பேர் புதிதாக நியமனம் செய்யப்பட்டார்கள்.
- தாபன நடவடிக்கைகள் பற்றிய பயிற்சிகளுக்கு அலுவலர்கள் எட்டுப் பேரும், நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சிகளுக்கு அலுவலர்கள் ஐந்து பேரும் பங்கேற்றனர்.
- திணைக்கள அலுவலர்களின் விடய ரீதியான அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களின் பட்டப் பின் படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிக் கட்டணங்களில் 50% - 75% வரையான தொகைகளைச் செலுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கன ரூபா 366,875/- ஆன தொகை ஒதுக்கப்பட்டது.

### 2.2 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நாடு முழுவதிலும் சகல பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கும் இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றி வருகின்ற சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் / உதவியாளர்களின் பயிற்சித் தேவைகளுக்காக இந்த செலவுத் தலைப்பின் நிதி பயன்படுத்தப்படுகின்றது. வருடாந்த திட்டத்திற்கு அமைய 2015 ஆம் ஆண்டு திணைக்கள மனிதவள அபிவிருத்திக்காக 1 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. மேற்படி தொகையிலிருந்து பின்வருமாறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| நிகழ்ச்சித்திட்டம் | | ஒதுக்கப்பட்டது தொகை (ரூபா) | பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் / நன்னடத்தை அலுவலர்கள் / திணைக்கள அலுவலர்களின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 820,995.00 | 818 |
| 02 | திணைக்களத்திற்கு வளவாளர்களின் குழுமம் ஒன்றைத் தாபித்தல் | 239,890.00 | 56 |

## 3. கணக்குகள் பிரிவு

திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிதி ஏற்பாடுகள் வருடாந்தம் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டு செலவுத் தலைப்பு இலக்கம் 217 இன் கீழ் சமூக பாதுகாப்பு எனும் பிரிவின் கீழ் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

இந்த ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொடுக்கும் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படுகின்றன.

1. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
2. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்ட அடிப்படையிலான ஏற்பாடுகள்/ செலவினம் பற்றிய பொழிப்புரை பின்வருமாறு.

**நிகழ்ச்சித்திட்ட அடிப்படையிலான ஏற்பாடுகள்/ செலவினம் பற்றிய பொழிப்புரை**

| | | ஏற்பாடு (ரூபா) | செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| **01.** செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்<br>கருத்திட்ட இல. 01 நிர்வாக, தாபனச் சேவைகள் | 1. மீண்டெழும் செலவினம் | 14,070,000.00 | 13,241,385.00 |
| | 2. மூலதனச் செலவினம் | 860,000.00 | 716,010.00 |
| | மொத்தம் | **14,930,000.00** | **13,957,395.00** |

| **02.** அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்<br><br>கருத்திட்ட இல 02 நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் | | **ஏற்பாடு (ரூபா)** | **செலவினம் (ரூபா)** |
|---|---|---|---|
| | 3. மீண்டெழும் செலவினம் | 276,013,000.00 | 264,964,118.00 |
| | | 32,257,000.00 | 28,106,353.00 |
| | மொத்தம் | **308,270,000.00** | **293,070,471.00** |

**மூலதன செலவின ஏற்பாடுகள்/ செலவினம் பற்றிய பொழிப்புரை**

| | **மூலதன சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்** | | **மூலதன சொத்துக்களின் கொள்வனவு** | |
|---|---|---|---|---|
| 01. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | **ஏற்பாடு (ரூபா)** | **செலவினம் (ரூபா)** | **ஏற்பாடு (ரூபா)** | **செலவினம் (ரூபா)** |
| கருத்திட்ட இல. 01 | 360,000.00 | 229,770.00 | 300,000.00 | 300,000.00 |
| 02. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்<br><br>கருத்திட்ட இல 02 | 760,000.00 | 398,980.00 | 1,497,000.00 | 1,433,433.00 |
| மொத்தம் | **1,120,000.00** | **628,750.00** | **1,797,000.00** | **1,733,433.00** |

**மூலதன செலவின ஏற்பாடுகள்/ செலவினம் பற்றிய பொழிப்புரை**

| | **திறன் விருத்தி** | | **சிறுவர் இல்லங்களைப் புனரமைத்தல்** | |
|---|---|---|---|---|
| 03. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | **ஏற்பாடு (ரூபா)** | **செலவினம் (ரூபா)** | **ஏற்பாடு (ரூபா)** | **செலவினம் (ரூபா)** |
| கருத்திட்ட இல. 01 | 200,000.00 | 186,240.00 | --- | --- |
| 04. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்<br><br>கருத்திட்ட இல 02 | 1,000,000.00 | 998,095.00 | 29,000,000.00 | 25,275,845.00 |
| மொத்தம் | **1,200,000.00** | **1,184,335.00** | **29,000,000.00** | **25,275,845.00** |

## 4. நன்னடத்தை நடவடிக்கைகள்

நன்னடத்தைச் சேவை என்பதன் மூலம் கருதப்படுவது நிறுவனமயப்படுத்தல், சிறைப்படுத்தல், வேறு நிதிசார் அபராதம் அல்லது வேறு தண்டனைக்கு உட்படுத்தாது குற்றவாளி ஒருவருக்கு புனர்வாழ்வு அளிப்பதாகும். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது, உரிய நபர் வாழும் சூழலிலேயே இருப்பதற்கு இடமளித்து நன்னடத்தை அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் அவர் சமூக விரோதச் செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து புதியதொரு வாழ்க்கையைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

1944 இன் 42 ஆம் இலக்க குற்றவாளிகளை நன்னடத்தையின் பொறுப்பில் வைத்திருப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவுக்கு அமைய யாதாயினுமொரு தவறின் தன்மைக்கு அமையவும், குற்றவாளியின் வயது, பால் மற்றும் அவரின் அந்தஸ்து ஆகிய விடயங்களும் நீதிமன்றத்தினால் கவனத்தில் கொள்ளப்பட்டு எந்தவொரு நபரும் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அவரின் விருப்பத்துடன், எந்தவொரு தவறு தொடர்பாகவும் நன்னடத்தை உத்தரவொன்றைப் பிறப்பிக்க முடியும்.

இவ்வாறு நன்னடத்தையின் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் குற்றவாளிக்கு பொருளாதார மற்றும் சமூக ரீதியல் பயன்கள் கிடைப்பதுடன், இது முழுச் சமுதாயத்திற்கும் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்கும். உதாரணமாக யாராயினும் ஆளொருவர் ஏதேனும் குற்றச் செயலை மேற்கொண்டதை அடுத்து, அவர் சிறை அல்லது வேறு தண்டனைக்கு உட்படுத்தப்படுவார் எனின், இது அவரின் குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாகவும், சமூக அடிப்படையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறே நாட்டுக்கும் அவ்வாறான ஆட்களைப் பராமரிப்புச் செய்வதற்காக அதிக நிதியைச் செலவிட வேண்டி ஏற்படுகின்றது. எனினும குறித் நபரை, அவர் வாழும் சூழலில் வைத்திருந்து அவரின் அன்றாட வாழ்க்கையை நல்லமுறையில் நடாத்திச் செல்வதற்கான அறிவுரைகள் நன்னடத்தைச் சேவையிலிருந்து கிடைக்கும். எனவே இந்த நன்னடத்தைச் சேவையை சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளித்தல் செயற்பாடாக முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைய நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் விடயம் மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள போதிலும் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தை அமுல்படுத்தும் பொறுப்பு மத்திய அரசின் கிழ் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே நன்னடத்தைச் சேவை பன்முகப்படுத்தப்பட வேண்டுமாயினும்

, கொள்கைகள், சட்டங்களைத் திருத்தியமைப்பது மத்திய அரசாங்கத் திணைக்களத்தின் செயற்பணியாகும். அதற்கமைய மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களை ஒருங்கிணைப்புச் செய்து நன்னடத்தைச் சேவையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திணைக்களத்தின் செயல்ரீதியான திட்டத்தின் கீழ் மாகாண திணைக்களங்களுக்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதும், அதன் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.1 தத்தெடுத்தல்

1941 இன் 24 ஆம் இலக்க தத்தெடுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தத்தெடுப்பதற்கு உத்தேசிக்கின்ற சிறுவர்களின் சட்டபூர்வமான பாதுகாவளராக செயற்படுகின்ற பொறுப்பு திணைக்களத்திற்கு அளிக்கப்படுகின்றது. இந்த செயற்பணி உள்நாடு மற்றும் வெளிநாடு என்ற வகையில் இரண்டாக வகுக்கப்படுகின்றது. இவற்றில் உள்நாட்டு தத்தெடுக்கும் நடவடிக்கைகள் மாகாண ஆணையாளரினால் மேற்கொள்ளப்படுவதுடன், வெளிநாட்டு தத்தெடுக்கும் நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் பிறந்துள்ளதுடன், தற்போது பல்வேறு நாடுகளில் பிரசாவுரிமையை பெற்றுள்ளவர்கள், இலங்கை மற்றும் வெளிநாடுகளுக்கான இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுள்ளவர்கள் மற்றும் தற்காலிகமாக வெளிநாடுகளில் வாழ்ந்து வருவோரும், சிறுவர்களை தத்தெடுப்பதற்கான தமது விண்ணப்பப் படிவங்களை மத்திய அரசின் இந்தத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கின்றார்கள். மேற்படி விண்ணப்பதாரர்கள் சிறுவர்களை நாட்டுக்கு வெளியே கொண்டு செல்வதன் காரணமாக அவர்கள் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பது தொடர்பான சட்டங்களைப் பின்பற்ற வேண்டும்.

மேலும் வெளிநாடுகளில் வாழும் ஒருசில விண்ணப்பதாரர்கள் தமது குடும்பத்தின் உறவினர்களது பிள்ளைகளை தத்தெடுக்க முன்வருகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளதுடன், அவர்களும் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பது தொடர்பான சட்டங்களைப் பின்பற்ற வேண்டி ஏற்படுகின்றது. மேலும் வெளிநாட்டவர்களும், இலங்கைப் பிள்ளைகளை தத்தெடுப்பதற்கான தமது விண்ணப்பப்படிவங்களை நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கின்றனர். சர்ததேச ஹேக் பிரகடனம் மற்றும் சிறுவர்களை தத்தெடுப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்படி விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்நாட்டு விண்ணப்பதாரர்கள் இல்லாத சிறுவர்கள் வெளிநாட்டு தத்தெடுப்பதற்கு வழங்கப்படுகின்றனர்.

## 4.2 தத்தெடுப்பதற்காக வெளிநாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை - 2015

| இல. | நாடு | வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் தத்தெடுத்துள்ள சிறுவர்களின் எண்ணிக்கை | வெளிநாட்டுத் தத்தெடுத்தல் | தத்தெடுப்பதற்காக வழங்கப்பட்ட மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அவுஸ்திரேலியா | 02 | - | 02 |
| 02 | கனடா | 02 | - | 02 |
| 03 | பிரான்ஸ் | 02 | 03 | 05 |
| 04 | ஜேர்மனி | 01 | 02 | 03 |
| 05 | நெதர்லாந்து | - | 02 | 02 |
| 06 | சுவிட்சர்லாந்து | 01 | 03 | 04 |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | நோர்வே | 01 | - | 01 |
| 08 | அமெரிக்கா | 01 | -- | 01 |
| 09 | இத்தாலி | - | 01 | 01 |
| 10 | ஐக்கிய இராச்சியம் | 01 | - | 01 |
| 11 | சிங்கப்பூர் | 01 | - | 01 |
| மொத்தம் | | 12 | 11 | 23 |

## 5. அபிவிருத்திப் பிரிவின் நடவடிக்கைகள்

சிறுவர்கள் தொடர்பில் விசேட பாதுகாப்பை விஸ்தரிக்க வேண்டியதன் அவசியத்தன்மை தொடர்பாக,

- 1924 சிறுவர் உரிமைகள் பற்றிய ஜெனீவா பிரகடனத்திலும்,
- 1959 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பிரகடனத்திலும்,
- 1976 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையிலும்,
- 1976 பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையிலும்,
- சிறுவர்களின் நலன்புரி தொடர்பில் கவனம் செலுத்துகின்ற விசேட இணை முகவராண்மை நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் யாப்புக்கள் மற்றும் குறித்த ஆவணங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும்,

குறிப்பிடப்பட்டுள்ளது.
அதற்கமைய இலங்கையில் சிறுவர் உரிமைகளை ஏற்றுக் கொள்கின்ற சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதனால் இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த பிரகடனத்தின் ஏற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் திணைக்களம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை அமுல்படுத்தியுள்ளது.

1. வாழ்வதற்கும், அபிவிருத்திக்குமுள்ள உரிமைகளை உறுதி செய்வதன் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

    - செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டம்
    - கல்வி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்
    - கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் திட்டம்
    - நெனதிறிய கல்வி உதவி வழங்குதல்
    - திடீர் அனர்த்தம் / மருத்துவ உதவி / இரட்டைக் குழந்தைகளுக்கு உதவும் திட்டம்.
    - செனஹச உதவித் திட்டம்

2. சிறுவர்களின் பங்கேட்பை உறுதி செய்வதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- சிறுவர் கழகங்களையும், சிறுவர் சபைகளையும் தாபித்தல்
- உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டங்கள்

3. சமுதாய அடிப்படையிலான சிறுவர் பாதுகாப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- மாதிரிக் கிராமம், நலன்புரிக் கிராமம் மற்றும் சமுதாய அடிப்படையிலான கிராமங்களைத் தாபித்தல்
- சிறுவர் உரிமைகள் பிரகடனம் பற்றிய நடவடிக்கைக் குழுக் கூட்டத்தை நடாத்தல்
- அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்

4. மாற்றுப் பாதுகாப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்
- நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களுக்கு தொழில் பயிற்சி அளித்தல்
- நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

## 5.1 செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு கல்வித் தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையானவாறு மாதாந்தம் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இதற்கு கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர்கள் மூலம் நிதிப் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

| ஆண்டு | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| 2015 | செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டம் | 137 | 1386000.00 |

## 5.2 சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்தல்

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பாடசாலைமயப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமாகும்

ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்கும் உரிமை உள்ளதுடன் சிறுவர் அபிவிருத்தியில் இது மிகவும் முக்கியமான காரணியொன்றாகும். சிறுவர் பராயத்தில் கல்வி கற்கும் வாய்ப்பு இழக்கப்பட்டால் சிறுவர்களின் எதிர்காலம் இருள்மிக்கதாகலாம். இலங்கையில் கல்வியை இடைநடுவே

கைவிடுகின்ற சிறுவர்கள் காரணமாக சிறுவர் ஊழியர்கள், சிறுவயது தாய்மார் உருவாகுதல் மற்றும் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு சிறுவர்கள் உள்ளாகும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. பெற்றோரை இழப்பது, பெற்றோரின் அறிவீனம், கவனயீனம், தாய் வெளிநாடு செல்லல், பொருளாதார கஷ்டங்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் சிறுவர்கள் இடைநடுவே பாடசாலைக் கல்வியை கைவிட நேரிடுகின்றது.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் இலங்கைச் சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதன் மூலம் தார்மீகமான சிறுவர் பரம்பரையொன்றை உருவாக்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இங்கு இரண்டு அணுகுமுறைகளின் கீழ் சிறுவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. அவையாவன,

- பாடசாலைக் கல்வியைப் பெறுகின்ற வயதிலுள்ள போதிலும் பொருளாதார கஷ்டங்கள் காரணமாக இடைநடுவே கல்வியைக் கைவிட்டுள்ள சிறுவர்கள்.
- பல்வேறு காரணங்களினால் விட்டு விட்டுப் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள்.

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இனங்கண்டு அவர்கள் பாடசாலைக்குச் செல்லாமைக்கான காரணங்கள் பற்றி ஆராய்ந்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாடசாலைமயப்படுத்தலும், கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளவாறு தோட்டப்புற சிறுவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பல கட்டங்களாக அமுல்படுத்தப்பட்டது.

- பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்து அவர்களை வலுவூட்டல்.
- கல்வியறிவூட்டுவதன் முக்கியத்துவம் பற்றி சிறுவர்கள், ஆசிரியர்கள், பெற்றோருக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்.
- அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், அலுவலர்களுக்கு மத்தியில் சிறுவர்களுக்கு நன்மைவிளையும் வகையில் நல்லதொரு ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்புதல்.

பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பாடசாலைமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

| தொடர் இல. | மாவட்டம் | சிறுவர்கள் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 01 | மொனராகலை | 03 | 3,000.00 |
| 02 | மாத்தறை | 115 | 175,500.00 |
| 03 | பதுளை | 25 | 25,000.00 |
| 04 | இரத்தினபுரி | 224 | 238,000.00 |
| 05 | அம்பாரை | 25 | 35,000.00 |
| 06 | ஹம்பாந்தோட்டை | 147 | 181,500.00 |
| 07 | கம்பஹா | 51 | 67,000.00 |
| 08 | புத்தளம் | 59 | 78,000.00 |
| 09 | களுத்துறை | 09 | 14,000.00 |
| 10 | மாத்தளை | 30 | 37,500.00 |
| 11 | கேகாலை | 69 | 72,500.00 |
| 12 | குருநாகல் | 73 | 101,500.00 |
| 13 | கொழும்பு | 34 | 40,500.00 |
| 14 | கண்டி | 134 | 190,000.00 |
| 15 | அநுராதபுரம் | 145 | 158,000.00 |
| 16 | பொலன்னறுவை | 28 | 29,000.00 |
| 17 | மட்டக்களப்பு | 36 | 54,000.00 |
| மொத்தம் | | 1207 | 150,0000.00 |

## 5.3 கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் நிகழ்ச்சித்திட்டம்

தொடர்ந்தும் சிறுவர்களின் கல்வித் தேவைகளுக்கு உத்துழைப்பு வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டமாக கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்ய முடியும். இது மாதாந்தம் வழங்கப்படுகின்ற கல்விப் புலமைப் பரிசில் திட்டமாக செயற்படுத்தப்பட்டுள்ளது. விசேட கல்விசார் திறமைகளைக் கொண்டுள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்ற பாடசாலை மாணவர்கள் இதன் இலக்குக் குழுக்களாவார்கள். இவர்களிலிருந்து பொருத்தமானவர்களை தெரிவு செய்து அனுப்புவதை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் மேற்கொள்வார்கள். மாதாந்தம் ரூபா 500/- அல்லது ரூபா 750/-இனை ஒரு சிறுவனுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**2015 ஆம் ஆண்டில் கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் புலமைப்பரிசில் வழங்கல்**

| | மாவட்டம் | சிறுவர்கள் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1. | கம்பஹா | 92 | 512700 |
| 2. | களுத்துறை | 83 | 507500 |
| 3. | மொனராகலை | 83 | 442500 |
| 4. | கொழும்பு | 82 | 457500 |
| 5. | பதுளை | 143 | 804000 |
| 6. | மாத்தறை | 106 | 621000 |
| 7. | காலி | 127 | 783000 |
| 8. | ஹம்பாந்தோட்டை | 118 | 604500 |
| 9. | புத்தளம் | 54 | 319500 |
| 10. | கேகாலை | 92 | 505500 |
| 11. | குருநாகல் | 205 | 1156500 |
| 12. | இரத்தினபுரி | 95 | 552000 |
| 13. | மாத்தளை | 67 | 372000 |
| 14. | அநுராதபுரம் | 160 | 927000 |
| 15. | பொலன்னறுவை | 13 | 84000 |
| 16. | நுவரெலியா | 12 | 91500 |
| 17. | திருகோணமலை | 16 | 90000 |
| 18. | கண்டி | 167 | 817500 |
| 19. | அம்பாரை | 17 | 82500 |
| 20. | மட்டக்களப்பு | 24 | 112500 |
| 21. | முல்லைத்தீவு | 3 | 13500 |
| 22. | யாழ்ப்பாணம் | 102 | 490500 |
| 23. | மன்னார் | 2 | 12000 |
| 24. | வவுனியா | 1 | 6000 |
| 25. | கிளிநொச்சி | 1 | 6000 |
| | | 1865 | 10371200 |

**மொத்த செலவினம்** **10,371,200**

**மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை** **1865**

## 5.4 நெனதிறிய கல்விப் புலமைப் பரிசில் திட்டம்

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கல்வியை இழக்கும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களுக்கு இந்தத் திணைக்களத்தின் முகாமைத்துவ சபையினால் நெனதிறிய நிகழ்ச்சித்திட்டம் மூலம் தனியார் துறையின் நிதி உதவியுடன் மாதாந்தம் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் செவண சரண கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் திட்டத்தின் கீழ் உப கருத்திட்டமொன்றாக அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் ஒரு சிறுவனுக்கு 1000 ரூபா முதல் 2000 ரூபா வரையான உதவித் தொகை வழங்கப்படுவதுடன், இத்தொகை அனுசரணையாளரின் விருப்பத்திற்கு அமைய வழங்கப்படுகின்றது.

**நெனதிறிய கல்விப் புலமைப் பரிசில் உதவிகளைச் செலுத்தல்**

| ஆண்டு | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| 2015 | நெனதிறிய கல்வி உதவி நிகழ்ச்சித்திட்டம் | 329 | 7086000.00 |

## 5.5 இரட்டைக் குழந்தைகளுக்கான உதவி

குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள இரட்டைக் குழுந்தைகளின் சுகாதாரம், போசனை, ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்கும், மேற்படி சிறுவர்களை அச்சுறுத்தலான நிலைமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குமாக வழங்கப்படுகின்ற உதவித்திட்டமொன்றாகும். பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்களுக்குத் தேவையான நிதி உதவிகள் இதன் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதன் கீழ் இரண்டு குழந்தைகளுக்கு ரூபா 7,500/- உம், மூன்று குழந்தைகளுக்கு ரூபா 15,000/- உம், நான்கு குழந்தைகளுக்கு ரூபா 20,000/- உம், ஐந்து குழந்தைகளுக்கு ரூபா 25,000/- உம் செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் இந்த உதவித் திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கமைய ஒரு வருடத்திற்கு 500 குடும்பங்களுக்கும் மேற்பட்டவர்களுக்கு இதன் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

## 5.6 மருத்துவ உதவி

குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள சிறுவர்களின் சுகாதார, போசனைச் சிக்கல்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த உதவித் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வலது குறைந்த சிறுவர்களுக்கும் இதன் மூலம் உதவி வழங்கப்படுகின்றது. அவ்வாறே வலதுகுறைந்த சிறுவர்களுக்கும் இதன் கீழ் உதவி வழங்கப்படுகின்றது. பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கின்ற விண்ணப்பங்களுக்கு அமைய தேவையான நிதி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

இதன் கீழ் மருத்துவ சிகிச்சை, சத்திர சிகிச்சை, போசனை நடவடிக்கைகள், உடல் ரீதியான பலவீனங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் உபகரணங்களுக்கும் உதவி வழங்கப்படுகின்றது. சிகிச்சை, போசனை நடவடிக்கைகளுக்காக ரூபா 5,000/- ஆன தொகையும், சத்திர சிகிச்சைகளுக்காக ரூபா 10,000/- ஆன தொகையும், உபகரணங்களுக்காக அவற்றின் விலைகளுக்கு அமைய பல்வேறு தொகைகளும் செலுத்தப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவுத் தொகைகள் அக்குழந்தைகளின் குடும்பங்களது பல்வேறு நிலைமைகள், அவர்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரிங்களின் அடிப்படையில் மாற்றமடைய முடியும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் இந்த உதவித் திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கமைய வருடாந்தம் சுமார் 500 குடும்பங்களுக்கு இதன் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

## 5.7 திடீர் அனர்த்த உதவி

திடீரென ஏற்படுகின்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்ற குடும்பங்களின் அநாதரவான சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு வழங்கப்படுகின்ற உதவித் திட்டமொன்றாகும். திடீரென சூழலில் ஏற்படுகின்ற வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, வீடுகள் தீயில் எரிதல் போன்ற நிலைமைகளினால் கஷ்டங்களை எதிர்நோக்குகின்ற சிறுவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் இதன் மூலம் செய்து கொடுக்கப்படும். அத்துடன் குடும்பங்களில் பெற்றோர் உயிரிழத்தல், சிறுவர்களை கைவிட்டுச் செல்லல், பெற்றோர் திடீர் விபத்துக்களுக்கும், நோய்களுக்கும் ஆளாகுதல், வெளிநாடு சென்றவர்கள் திரும்பி வராமை, சிறுவர்கள் தற்காலிக பாதுகாவளர்களின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்படுதல், குறித்த பாதுகாவளர்கள் உடல், உள ரீதியில் பலவீனமானவர்களாக இருத்தல் போன்ற காரணங்களினால் அநாதரவான நிலைக்குத் தள்ளப்படுகின்ற சிறுவர்களுக்கு உதவுவதற்கும் இந்த உதவித் திட்டத்தின் கீழ் வசதி செய்யப்படும்.

யாதாயினுமொரு அனர்த்த நிலைமையின் போது சிறுவர்களின் பாடசாலை உபகரணங்கள் சேதமடைந்திருப்பின் அதற்குப் பதிலாக ஒரு குடும்பத்திற்கு ரூபா 5000/- ஆன உதவித் தொகை வழங்கப்படும். அவ்வாறாயினும், அவ்வவ் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற இழப்புக்களின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற உதவித் தொகை மாற்றமடைய முடியும். யாதாயினுமொரு அனர்த்த நிலைமையின் போது சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியளிப்பது இதன் பிரதான நோக்கமாகும். பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு அமைய தேவையான நிதிஉதவி பெற்றுக் கொடுக்கப்படும்.

## இரட்டைக் குழந்தை / மருத்துவ உதவி / திடீர் அனர்த்தங்களுக்கு உதவும் திட்டம் - 2015

| | | இரட்டைக் குழந்தைகள் உதவி | | மருத்துவ உதவி | | திடீர் அனர்த்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| மாகாணம் | மாவட்டம் | சிறுவர்களின் எண்ணிக்கை | தொகை | சிறுவர்களின் எண்ணிக்கை | தொகை | சிறுவர்களின் எண்ணிக்கை | தொகை |
| மேல் மாகாணம் | கொழும்பு<br>கம்பஹா<br>களுத்துறை | 37<br>62<br>102 | 150000<br>255000<br>385000 | 13<br>4518 | 80000<br>245000<br>95000 | 01<br>01<br>01 | 5000<br>15600<br>5000 |
| மத்திய மாகாணம் | கண்டி<br>மாத்தளை<br>நுவரெலியா | 87<br>32<br>24 | 337500<br>120000<br>90000 | 26<br>05<br>08 | 125000<br>25000<br>60000 | 08 | 31000<br>-<br>- |
| வடமேல் மாகாணம் | குருநாகல்<br>புத்தளம் | 104<br>46 | 415000<br>180000 | 41<br>05 | 335000<br>25000 | 167<br>02 | 119500<br>15000 |
| சபறகமுவா மாகாணம் | இரத்தினபுரி<br>கேகாலை | 85<br>25 | 333000<br>97500 | 32<br>03 | 200000<br>45000 | 74<br>02 | 120000<br>15000 |
| தென் மாகாணம் | காலி<br>மாத்தறை<br>ஹம்பாந்தோட்டை | 52<br>63<br>94 | 127500<br>240000<br>112500 | 14<br>29<br>09 | 85000<br>212000<br>45000 | -<br>03<br>05 | -<br>22700<br>21000 |
| ஊவா மாகாணம் | பதுளை<br>மொனராகலை | 69<br>43 | 242500<br>165000 | 17<br>29 | 85000<br>177000 | 106<br>06 | 108000<br>40000 |
| வடமத்திய மாகாணம் | அநுராதபுரம்<br>பொலன்னறுவை | 27<br>09 | 97500<br>37500 | 31<br>13 | 180000<br>95500 | 04<br>1189 | 15900<br>700500 |
| கிழக்கு மாகாணம் | அம்பாரை<br>மட்டக்களப்பு<br>திருகோணமலை | 16<br>66<br>24 | 60000<br>270000<br>82500 | 16<br>53<br>29 | 9000<br>295000<br>155000 | 02<br>829<br>- | 9000<br>834000<br>- |
| வடக்கு மாகாணம் | யாழ்ப்பாணம்<br>முல்லைத்தீவு<br>வவுனியா<br>கிளிநொச்சி<br>மன்னார் | 61<br>09<br>18<br>18<br>10 | 232500<br>30000<br>67500<br>67500<br>37500 | 40<br>02<br>07<br>-<br>22 | 240000<br>15000<br>35000<br>-<br>145000 | -<br>-<br>-<br>-<br>- | -<br>-<br>-<br>-<br>- |

## 5.8 செனஹச சேமிப்புக் கணக்கு

சுனாமி அனர்த்தத்தினால் பெற்றோர் இரண்டு பேரையும் இழந்துள்ள 18 வயதுக்குக் குறைவான சிறுவர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். 2006 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் போது சிறுவர்கள் 689 பேர் இதில் உள்ளடக்கப்பட்டார்கள். 2015 டிசம்பர் மாதமளவில் இதிலிருந்த சிறுவர்களின் எண்ணிக்கை 98 பேராகும். ஒவ்வொரு மாதமும் 18 வயதைப் பூர்த்தி செய்கின்ற சிறுவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீக்கப்படுகின்றார்கள்.

இந்தத் திணைக்களம், மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்துடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. ஒவ்வொரு மாதமும் குறித்த சிறுவர்களுக்காக இந்தத் திணைக்களத்தினால் மக்கள் வங்கிக்கு (காசோலை மூலம்) பணம் அனுப்பப்படுகின்றது.

18 வயது பூர்த்தியடைகின்ற சிறுவர்கள் தொடர்பாக மக்கள் வங்கி மூலம் திணைக்களத்திற்கு மாதாந்தம் அறிவிக்கப்படுவதுடன், குறித்த சிறுவர்களுக்கு உரிய நிதியை அனுப்பிய பின்னர் மக்கள் வங்கி அது பற்றிய தகவல்களை திணைக்களத்திற்கு அறியத்தரும்.

**2015ஆம் ஆண்டு செனெஹச கணக்கின் நிதி செலவிடப்பட்ட முறை**

| தொடர் இல. | மாதம் | சிறுவர்கள் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 01 | ஜனவரி | 116 | 174,000 |
| 02 | பெப்ருவரி | 116 | 174,000 |
| 03 | மார்ச் | 115 | 172,500 |
| 04 | ஏப்ரல் | 111 | 166,500 |
| 05 | மே | 109 | 163,500 |
| 06 | யூன் | 107 | 160,500 |
| 07 | யூலை | 106 | 156,000 |
| 08 | ஆகஸ்ட் | 104 | 156,000 |
| 09 | செப்தெம்பர் | 102 | 153,000 |
| 10 | அக்டோபர் | 98 | 147,000 |
| 11 | நவம்பர் | 96 | 144,000 |
| 12 | டிசம்பர் | 96 | 144,000 |

## 5.9 சிறுவர் கழகங்களையும், சிறுவர் சபைகளையும் தாபிக்கும் கருத்திட்டம்

சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 12,13,14 ஆகிய யாப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்து சிறுவர்களை வலுவூட்டுதை பிரதான நோக்காகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு கிராம அலுவலர் மட்டத்தில் சிறுவர் கழகங்கள் தாபிக்கப்பட்டன. இவ்வாறு தாபிக்கப்பட்ட சிறுவர் கழகங்கள் ஊடாக சிறுவர்களின் அபிவிருத்திக்கும், திறன் விருத்திக்குமான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் கழகங்களை ஒன்றிணைத்து பிரதேச சிறுவர் சபையும், பிரதேச சிறுவர் சபையின் அலுவலர்களை ஒன்றிணைத்து மாவட்ட சிறுவர் சபையும் தற்போது தாபிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் பிரதேச சிறுவர் சபையும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சிறுவர் சபையும் தற்போது தாபிக்கப்பட்டுள்ளன. மாவட்ட சிறுவர் சபைகளை ஒன்றிணைத்து தேசிய சிறுவர் சபையும் உருவாக்கப்பட்டுள்ளது. சிறுவர் கழகங்களின் ஊடாக சிறுவர்களுக்கான திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், சிறுவர் கழகங்களின் நூலகங்களுக்கு புத்தகங்களைப் பெற்றுக் கொடுத்தல், நல்ல பண்பாடுகளை மேம்படுத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

- *சிறுவர் கழகம் மற்றும் சிறுவர் சபை வேலைத்திட்டத்திற்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல்*

2014 ஆம் ஆண்டு இக்கருத்திட்டத்திற்கு வருடாந்த மதிப்பீட்டில் 2.5 மி.ரூ. ஆன தொகை ஒதுக்கப்பட்டது. மேற்படி ஏற்பாடுகள் குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு செலவிடப்பட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- *பிரதேச சிறுவர் சபையை அமுல்படுத்துவதற்கு ஆண்டின் ஆரம்பத்தில் நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல்*

பிரதேச சிறுவர் சபைக்கு உரித்தான சிறுவர்களை ஒன்றுதிரட்டி ஆண்டினுள் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றியும், சிறுவர் சபையை ஒன்றுகூட்டுவது மூன்று மாதங்களுக்கொருமுறை இடம்பெறுகின்றது. பிரதேச சிறுவர் சபையினால் தயார் செய்யப்படுகின்ற வருடாந்த திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகைளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த ஆண்டின் ஏற்பாடுகள் போதுமானதாக இருக்கவில்லை. எனவே பிரதேச சிறுவர் சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. எனினும் கோரிக்கைகளுக்கு அமைய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டன.

- *சிறுவர் கழகங்களின் சிறுவர்களது ஆக்கபூர்வமான ஆற்றல்களை வளர்த்தல்*

சிறுவர் கழகங்களின் சிறுவர்களது ஆக்கபூர்வமான ஆற்றல்களை வளர்ப்பதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடாத்தப்பட்டன. சிறுவர் கழகங்களை மென்மேலும் செயல்திறன் மிக்கதாக்கி சிறுவர்களின் பங்கேட்பு, சகோதரத்துவம், திறன் விருத்திக்காக இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

- *சிறுவர் கழகங்கள் / சிறுவர் சபைகளின் சிறுவர்களது விளையாட்டுத் திறமைகளை வளர்ப்பதன் ஊடாக ஆளுமையை அபிவிருத்தி செய்தல்.*

சிறுவர் கழகங்கள் / சிறுவர் சபைகளின் சிறுவர்கள் விளையாட்டுக்களில் பங்கேட்பதை வளர்த்தல் மற்றும் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், சிறுவர் கழகங்கள் ஊடாக இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. விளையாட்டிலுள்ள முக்கியத்துவம் மற்றும் அதனூடாக ஆளுமையை விருத்தி செய்வதும் இதன் நோக்கங்களாகும்.

- *தேசிய / சமய / கலாச்சார வைபவங்களை நடாத்தல்*

சமூக்திலிருந்து விடுபட்டு வருகின்ற புத்தாண்டுப் பாரம்பரியங்கள் மற்றும் பண்டைய விளையாட்டு மரபுகள் உட்பட கலாச்சார அம்சங்கள் தொடர்பாக சிறுவர்களுக்கு அறிவுறுத்துவது எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானதாகும். எனவே சிறுவர் கழக சிறுவர்களுக்கு இவ்வாறான புத்தாண்டுக் கொண்டாட்டங்களை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
மேலும் சமய வைபவங்கள், தேசிய வைபவ தினங்கள் தொடர்பிலான முக்கியத்துவத்தை சிறுவர்கள் மத்தியில் உறுதி செய்வதற்காக அவ்வாறான வைபவ தின நிகழ்வுகளை நடாத்துவதற்கான ஒழுங்குகள் சிறுவர் கழகங்கள் / சிறுவர் சபைகளினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- *நூலகங்களை அபிவிருத்தி செய்தல்*

சிறுவர் கழகங்களினால் நடாத்திச் செல்லப்படுகின்ற நூலகங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அபிவிருத்தி செய்வதற்காக திணைக்களம் உதவிகளை வழங்குகின்றது. சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல், அறிவை வளர்த்தல், கருத்து ரீதியான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு நூலகங்களை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

- *கல்விச் சுற்றுலாக்கள்*

சிறுவர் கழகங்களின் சிறுவர்களின் பங்கேட்பை வளர்த்தல், சிறுவர் கழகங்களுக்கு மத்தியில் அனுபவப் பகிர்வு, வளியாட்டம், ரசணையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு நடைமுறை அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டு சிறுவர் கழக சிறுவர்கள் கல்விச் சுற்றுலாக்களில் பங்கேட்கச் செய்யப்படுகின்றனர்.

- *தலைமைத்துவப் பயிற்சிச் செயலமர்வுகள் / முகாம்களை நடாத்தல்*

சிறுவர்களின் ஆளுமை விருத்தி, அறிவியல் திறன் விருத்தி, சிறுவர்களை சுற்றாடலுக்கு உணர்வுப்பூர்மான, ஆராய்ச்சி செய்யக்கூடியவர்களாக மாற்றியமைத்தல், தலைமைத்துவ திறமைகளை வளர்த்தல் போன்றவற்றுக்காக இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

- *சுகாதாரத்திற்குள்ள உரிமையை உறுதி செய்தல்*

பாலர் பாடசாலை, பாடசால மாணவர்களின் பல்வேறு நோய்களை இனங்காணும் நோக்கத்துடன், பின்தங்கிய மாகாணங்களில் சிறுவர்களுக்கான சிகிச்சை முகாம்களை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் சிறுவர்களுக்கு,

i. நல்லதொரு சுகாதார நிலைமையைப் பேணிவருவதன் முக்கியத்துவம் பற்றி பெற்றோருக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

ii. மருத்துவ நிபுணர்களிடமிருந்து சிகிச்சை பெறும் வசதிகளற்ற சிறுவர்களுக்கு அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

iii. கற்புல, செவிப்புல ரீதியில் சிறிய குறைபாடுகளைக் கொண்டுள்ள சிறுவர்களை இனங்கண்டு தேவையான சிகிச்சைகளை வழங்குதல்.

iv. மிகவுச் சிறியவிளான பங்களிப்புடன் குணப்படுத்தக்கூடிய நோய்களைக் கொண்டுள்ள சிறுவர்களை முன்னதாகவே இனங்காணும் வாய்ப்புக் கிடைக்கும்.

- ரசனைக்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

பாடசாலை பாடவிதானத்தினுள் அடைபட்டுள்ள சிறுவர்களுக்கு திறந்த வெளி கலை அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் பாடல் ரசனை ஆற்றல்களை மேம்படுத்தல் மற்றும் பல்வேறு சமூக சிக்கல்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை சற்று அந்த சிக்கல்களிலிருந்து விடுவிப்பதன் மூலம் மனதை தேற்றிக்கொள்ளும் ஆற்றல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சிறுடைப்பதனால் சிறுவர் கழகம், சிறுவர் சபை சிறுவர்களுக்கு இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்வது முக்கியமானதாகும்.

| தொடர் இலக்கம் | மாவட்டம் | 2015 இல் தாபிக்கப்பட்ட சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள மொத்த சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை | செலவான மொத்தத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 32 | 189 | 128,700.00 |
| 02 | களுத்துறை | 32 | 160 | 101,000.00 |
| 03 | கம்பஹா | 46 | 279 | 153,500.00 |
| 04 | கண்டி | 62 | 370 | 155,000.00 |
| 05 | மாத்தளை | 31 | 134 | 55,000.00 |
| 06 | நுவரெலியா | 10 | 98 | 40,000.00 |
| 07 | காலி | 36 | 229 | 126,500.00 |
| 08 | மாத்தறை | 48 | 194 | 95,000.00 |
| 09 | ஹம்பாந்தோட்டை | 16 | 159 | 80,000.00 |
| 10 | இரத்தினபுரி | 47 | 171 | 110,000.00 |
| 11 | கேகாலை | 17 | 141 | 75,000.00 |
| 12 | அநுராதபுரம் | 29 | 224 | 115,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | பொலன்னறுவை | 09 | 64 | 40,000.00 |
| 14 | புத்தளம் | 10 | 158 | 90,000.00 |
| 15 | குருநாகல் | 123 | 509 | 215,000.00 |
| 16 | பதுளை | 19 | 131 | 95,000.00 |
| 17 | மொனராகலை | 13 | 163 | 85,000.00 |
| 18 | திருகோணமலை | 07 | 78 | 45,000.00 |
| 19 | அம்பாரை | 14 | 104 | 100,000.00 |
| 20 | மட்டக்களப்பு | 10 | 70 | 80,000.00 |
| 21 | யாழ்ப்பாணம் | 33 | 43 | 100,000.00 |
| 22 | கிளிநொச்சி | 08 | 08 | 30,000.00 |
| 23 | மன்னார் | 03 | 21 | 35,000.00 |
| 24 | முல்லைத்தீவு | 22 | 22 | 10,000.00 |
| 25 | வவுனியா | - | 38 | 30,000.00 |

## 5.10 மாதிரி சிறுவர் கிராம நிகழ்ச்சித்திட்டம்

சமுதாய அடிப்படையிலான சிறுவர் காப்புறுதிச் செயன்முறையை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு கிராமத்தில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவற்கு இதன் கீழ் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் பல்வேறு அரச அலுவலர்களின் தலையீட்டுடன் மேற்படி கிராமங்களில் ஒவ்வொரு சிறுவனினதும் அபிவிருத்தி, நிலைத்திருத்தல், பாதுகாப்பு மற்றும் பங்கேட்பு ஆகிய உரிமைகளைப் பாதுகாக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

இதற்காக பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அமுல்படுத்தக்கூடிய கருத்திட்ட அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அத்தேவைகளின் அடிப்படையில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டன. அதற்கமைய 311 பிரதேச செயலாளர் பிரிவுகளின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் 352 பேருக்காக ரூபா 5000.00 வீதம் ரூபா 176,0000.00 ஆன தொகை வழங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் அலுவலர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

| **தொடர் இல.** | **மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு** | **நிகழ்ச்சித்திட்டம்** | **செலவினம் ரூபா** |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் - கலென்பிந்துனுவெவ | சிறுவர் கலாசார நிகழ்ச்சித்திட்டம் | 15500.00 |
| 02 | குருநாகல் - மாஸ்பொத்த | புத்தாண்டு நிகழ்ச்சித்திட்டம் | 1500.00 |
| 03 | ஹம்பாந்தோட்டை - வீரகெட்டிய | நூலக நூல்களை வழங்கிவைத்தல் | 15000.00 |

| | | | |
|---|---|---|---|
| 04 | கண்டி - நாவலப்பிட்டி | பாடசாலை சுவர்களில் சித்திரம் வரைவதற்கு | 5000.00 |
| 05 | பதுளை - ரிதீமாலியத்த | நடமாடும் சேவை நூல்கள் வழங்கல் | 144475.00 |
| 06 | குருநாகல் - மாஸ்பொத்த | பற்சிகிச்சைக்கு | 6500.00 |
| 07 | மட்டக்களப்பு - ஓட்டமாவடி | மாதிரிக் கிராம அபிவிருத்தி திட்டம் பற்றிய செயமலர்வு | 14200.00 |
| 08 | மாத்தளை மாவட்ட செயலகம் | சிறுவர் நற்பு வள நிலையத்தை திறந்து வைத்தல் | 77740.00 |
| 09 | களுத்துறை - பதுரலிய | சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 38000.00 |
| 10 | காலி - இமதுவ | சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 32000.00 |
| 11 | கம்பஹ - பியகம | சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 31625.00 |
| 12 | காலி - பெந்தோட்டை | சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 49830.00 |
| 13 | கொழும்பு - மாலம்பே கடுவளை | சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 25161.00 |

## 5.11 சிறுவர் உரிமைகள் பற்றிய நடவடிக்கைக் குழு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை சர்வதேச சிறுவர் பிரகடனத்தில் கைச்சாத்திட்ட பின்னர் இந்நாட்டிலுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முக்கியமானதொரு நடவடிக்கையாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தைக் குறிப்பிட முடியும். இந்த நடவடிக்கைக் குழுக்கள் 2000 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட MSS/3/4/161 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் தாபிக்கப்பட்டதுடன், இந்தத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட PCC/CROP/11/3/4 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் மீண்டும் வரைவு செய்யப்பட்டது. நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையான சகல மட்டங்களுக்கும் இந்த நடவடிக்கைக் குழுக்கள் தாபிக்கப்பட்டன. சிறுவர்கள் வாழ்வதற்கு உகந்த சூழலை உருவாக்கும் நோக்கத்துடன், அமுல்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் குழுக்களை வலுவூட்டுவதன் ஊடாக சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சிறுவர்களின் பங்கேற்பை விஸ்தரிப்பதற்கான சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டத்திலும் படிப்படியான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ள இரண்டாவது பெறுபேறாகும். இதற்காக ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு ரூபா 3000 வீதம் ரூபா 939,000 உம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூபா 20,000 வீதம் ரூபா 500,000 உம் செலவிடப்பட்டுள்ளது.

| தொடர் இல. | மாகாணம் | பிரதேச நடவடிக்கைக் குழுக்களுக்கு செலவிடப்பட்ட தொகை (ரூ,) |
|---|---|---|
| 01 | மேல் | 120,000.00 |
| 02 | மத்திய | 108,000.00 |
| 03 | தெற்கு | 141,000.00 |
| 04 | வடக்கு | 87,000.00 |
| 05 | கிழக்கு | 105,000.00 |
| 06 | வடமேல் | 135,000.00 |
| 07 | வடமத்திய | 81,000.00 |
| 08 | ஊவா | 78,000.00 |
| 09 | சபறகமுவா | 84,000.00 |

## 5.12 சிறுவர் நற்பு நிலையங்கள்

அச்சுறுத்தலான குடும்ப சூழலில் தனிப்படுகின்ற சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து அவர்களின் ஓய்வு நேரத்தை பாதுகாப்பாக கழிப்பதற்கு இந்த நிலையங்களில் தேவையான அரவணைப்புக்கள் செய்து கொடுக்கப்படுகின்றன. பெற்றோர் இருவரும் தமது வீடுகளுக்கு வெளியே செயற்படுகின்ற சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் பாதுகாப்பு, அறிவு, திறமைகளை வளர்ப்பதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதன் போது நூல்நிலையம், உள்ளக விளையாட்டு மற்றும் வெளி விளையாட்டுக்களில் ஈடுபடும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கின்றது.

இதற்காக ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிலையங்களை நிர்மாணிக்கத் தேவையான வசதிகளைக் கொண்டுள்ள இடங்களுக்கு அமைய கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு ஏற்ப தேவையான நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | பிரதேசம் | செலவிடப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|
| 01 | வவுனியா - வெங்கலசெட்டிக்குளம் | 220,000.00 |
| 02 | மன்னார் – நானட்டான் | 250,000.00 |
| 03 | நுவரெலியா – அம்பகமுவகோரளை | 200,000.00 |
| 04 | ஓட்டமாவடி | 32,186.00 |
| | மொத்தம் | 702,186.00 |

## 5.13 கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்

கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்காக தோட்டப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் பிள்ளைகள் மற்றும் நீண்டகாலமாக நிலவி வந்த யுத்த சூழல் காரணமாக இடம்பெயர்ந்துள்ள சிறுவர்களை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்தப் பிரதேசங்களில் வாழும் சிறுவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து, பாதுகாப்பான சிறுவர் பராயமொன்றை உருவாக்கிக் கொடுப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். சிறுவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல், அவர்களுக்கான களியாட்ட நிலையங்களைத் தாபித்தல், சித்திரம், இசை, நடனம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தல், கல்வியறிவு அற்ற சிறுவர்களுக்காக கல்வியறிவூட்டும் வகுப்புக்களை நடாத்தல் போன்றன இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பிரதேச செயலாளர் பிரிவுகளிடமிருந்து கிடைக்கும் கோரிக்கைகளுக்கு அமைய ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

யுத்தத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களை அறிவுறுத்துவதற்காக மாவட்ட செயலக மட்டத்தில் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. வீடுகளுக்கு வெளியே நடவடிக்கை மேற்கொள்ளும் போது சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அறிவு, திறமை மற்றும் ஆற்றல்களை வளர்ப்பதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன. இதன் போது நூலகங்கள் உள்ளக விளையாட்டு அரங்குகள் வெளிவிளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பம் இப்பிள்ளைகளுக்குக் கிடக்கும்.

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | புனர்வாழ்வளிக்கப்பட்ட சிறுவர் படைவீரர்களுக்கு விசேட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் அமுல்படுத்தல் | நிகழ்ச்சித்திட்டங்கள் 25 |
| 02 | சுயதொழில்வாய்ப்பு உதவிகளை வழங்கும் கருத்திட்டம் | கருத்திட்டங்கள் 05 |
| 03 | சிறுவர் நற்பு நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் மேற்படி நிலையங்களில் சிறுவர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் உள்ளக, வெளிப்புற செயற்பாடுகளுக்கான விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தல் | நிலையங்கள் 04 |
| 04 | சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், துஷ்பிரயோகங்கள் தொடர்பாக மற்றும் சிறுர்களின் உரிமைகள் தொடர்பாக பல்வேறு தலைப்புக்களின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. | நிகழ்ச்சித்திட்டங்கள் 150 |
| 05 | நடமாடும் சேவைகளை நடாத்தி சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கல் மற்றும் பற்சிகிச்சை முகாம்களை நடாத்தல் | சிறுவர்கள் 25<br>சிகிச்சை முகாம் 02 |

| | | |
|---|---|---|
| 06 | தோட்டப்புற பாடசாலைகளுக்கு:<br>சிறுவர் கழகங்களைத் தாபித்தல்<br>அதன் மூலம் நூலக வசதிகளை வழங்கல்<br>கல்வி அறிவூட்டும் வகுப்புக்களை நடாத்தல்<br>விட்டு விட்டு பாடசாலைக்குச் செல்லுவோரை மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பதற்காக கற்கை உபகரணம் வழங்கல் | சிறுவர் கழகம் 80<br>நூலகம் 09<br>வகுப்பு 02<br>உபகரண தொகுதிகள் 2003 |
| 07 | பல்வேறு உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்:<br>இரட்டைப் பிள்ளை மருத்துவ உதவி, திடீர் சிகிச்சை<br>கெப்பகரு பெற்றார் பாதுகாவளர் புலமைப்பரிசில்<br>நெனதிறிய நிகழ்ச்சித்திட்டம்<br>கிராமிய நடவடிக்கைக் குழுக்களைத் தாபித்தல்<br>சிறுவர் கழகங்கள்<br>திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | 450<br>புலமைப் பரிசில்கள் 108<br>நிகழ்ச்சித்திட்டங்கள் 12<br>குழுக்கள் 440<br>71<br>சிறுவர் இல்லங்கள் 12 |

## 5.14 அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக சமூகத்திலுள்ள பல்வேறு சமூகக் கட்டமைப்புக்களை அறிவுறுத்தும் முக்கிய நோக்கத்துடன், இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளையும், மாவட்ட செயலகங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் நடாத்தப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள பல்வேறு பகுதியினரையும் பிரதிநிதித்துவம் செய்து “பலமிக்க இறக்கைகளைக் கொண்ட வண்ணாத்துப்பூச்சுப் பருவம்” என்ற தலைப்பின் கீழ் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் போது இளம் சிறார்களின் இளம் பருவத்தை பொறுப்புடன் கழிப்பது மற்றும் துஷ்பிரயோக செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்வதற்காக சிறுவர்களின் அறிவை வளர்த்து மேம்படுத்தி பாதகமான துன்புறுத்தும் செயற்பாடுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு என்பது பற்றி இதன் மூலம் அறிவுறுத்தப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் போது 02 தலைப்புக்களின் கீழ் விரிவுரைகள் ஆற்றப்படுகின்றன.

01. இளப் பருவ மாற்றங்களும், ஆளுமை விருத்தியும்

02. நவீன தொழில்நுட்பமும், பரம்பரையும்

இதனை முன்னிட்டு மாவட்ட செயலக மட்டத்தில் “எமது வண்ணாத்துப்பூச்சுகளின் இறக்கைகளைப் பலப்படுத்துவோம்” என்ற தலைப்பின் கீழ் சமூகத்திலுள்ள பெற்றோர், பெரியவர்களான சமுதாயத்தினர் அறிவுறுத்தப்படுகின்றனர். ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் ரூபா 7500/- ஆன ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட செயலகங்களுக்கு ரூபா 7500/- ஆன ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன. பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 347 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் 34000 பேர் அறிவுறுத்தப்பட்டார்கள். இதற்கென ரூபா 39,94,660.00 ஆன தொகை செலவிடப்பட்டது.

## 5.15 நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் சிறுவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொண்டர் சிறுவர் இல்லங்கள் மற்றும் அரசாங்க சிறுவர் இல்லங்களில் புனர்வாழ்வளிப்பதற்கு உட்பட்டுள்ள சிறுவர்களின் நலனுக்காக இந்தக் கருத்திட்டத்தின் மூலம் நிதி உதவி வழங்கப்படுகின்றது. சிறுவர் இல்லங்களின் நேரடியான கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான பொறுப்பாக உள்ள போதிலும், தேசிய திணைக்களமும், சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களை கட்டியெழுப்பும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கி வரகின்றது. மேற்படி நிறுவனங்களிலுள்ள சிறுவர்களின் தொழில்சார் பயிற்சிகள் மற்றும் பல்வேறு ஆற்றல்களை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளுக்கு இந்தக் கருத்திட்டம் வருடாந்தம் பெருமளவு நிதியை செலவிடுகின்றது. மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளர்களின் கோரிக்கைகள் மற்றும் சிபாரிசுகளின் அடிப்படையில் இந்த நிதி வழங்கப்படும்.

அதற்கமைய நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்களுக்கு விசேட திறன்விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் பொருட்டு செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 1,689,650.58 ஆகும்.

மேலும் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களுக்கு தொழில் பயிற்சி வழங்கல் மற்றும் மேற்படி தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 1,866,968/- ஆகும்.

சிறுவர்களின் பின்னாய்வு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதற்காக ரூபா 429,679/- செலவிடப்பட்டுள்ளது.

## 5.16 பரத்த சிறுவர் பயிற்சி, மதியுரைச் சேவைகள் தேசிய நிலையம்

துஷ்பிரயோக சம்பவம் அல்லது சிறுவர்களின் உரிமை மீறல் காரணமாக உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்ற சிறுமியர்களுக்கான மதியுரைகள் மற்றும் தேவைகளுக்காக தாபிக்கப்பட்டுள்ள நிறுவனமாக பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் மதியுரைச் சேவைகள் நிலையத்தைக் குறிப்பிட முடியும். மத்திய அரசின் கீழ் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஒரேயொரு சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் இதுவாகும்.

ஒரே தடவையில் சிறுவர்கள் 20 பேருக்கு மதியுரை, தொழில் பயிற்சி, முறைசார்ந்த கல்வி பெறாதோருக்குத் தேவையான கல்வியை இந்த நிலையத்தின் மூலம் பெற்றுக் கொடுக்க முடியும். பிரதேச மட்டத்தில் கடமைகளை நிறைவேற்றுகின்ற சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களினால் அனுப்பப்படுகின்றதன் அடிப்படையில் மற்றும் நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறுமியர்கள் மாகாண நன்னடத்தை ஆணையாளரின் சிபாரிசின் அடிப்படையில் இந்த நிறுவனத்தில் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

சகல சிறுமியர்களும் விடுதியில் தங்க வைக்கப்பட்டு 06 மாத காலப்பகுதிக்குள் உரிய ஆலோசனை மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி காலப்பகுதிக்குள் சிறுவர்களின் பாதுகாப்புக்கு விடுதிப் பாதுகாவளர் மூவர், காவலாளி, நிறுவனத்தின் நிலையப் பொறுப்பு அலுவலர் மற்றும் முறைசாராக் கல்வி ஆலோசகர்களும் இங்கு சேவையாற்றுகின்றனர்.

## 5.17 சிறுவர் இல்லங்களின் தரத்தை மேம்படுத்தல்

சகல மாகாணங்களிலும் அமைந்துள்ள அரசாங்க மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள தொண்டர் சிறுவர் இல்லங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் மாகாண ஆணையாளர்களினால் இனங்காணப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற அபிவிருத்தி யோசனைகளுக்கு நிதி உதவிகள் இத்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

வருடாந்தம் இனங்காணப்படுகின்ற இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் அவசியத்தன்மையை உறுதி செய்து கொண்ட பின்னர் மதிப்பீட்டுத் தொகையில் ஒரு பகுதி அல்லது பூரணமாக மாகாண ஆணையாளர்களுக்கு விடுவிக்கப்படும். அதற்கமைய முறையாக கருத்திட்டங்களை பூர்த்தி செய்து விலைப் பட்டியல்களின் பிரதிகள் மற்றும் செலவின அறிக்கைகளுடனான தகவல்கள் தலைமை அலுவலகத்திற்குப் பெற்றுக் கொள்ளப்படும். இந்தக் கருத்திட்டங்களின் சகல முன்னேற்றம், பரிசீலனை மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளும், கண்காணிப்பும் மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர்களுக்கு உரித்தான பணிகளாகும்.

அதற்கமைய 2015 ஆம் ஆண்டில் இந்த செலவுத் தலைப்பின் கீழ் நாடு முழுவதும் அமைந்துள்ள சிறுவர் இல்லங்கள் மற்றும் பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை நிலையத்தின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் அவசியமான பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 16,847,250.85 ஆன தொகை செலவிடப்பட்டது.

## 5.18 நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளசிறுவர்களின் திறமைகளை வளர்த்தல்

இதற்காக 2.0 மி.ரூ. ஆன தொகை ஒதுக்கப்பட்டதுடன் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 1574262.04/- ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

சிறுவர் இல்லங்களை கண்காணிப்புச் செய்வதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 1923625/- ஆகும்.

## 5.19 யுனிசெவ் கருத்திட்டம்

இந்தத் திணைக்களம் யுனிசெவ் கருத்திட்டத்துடன் இணைந்து யுனிசெவ் நிறுவனத்தின் நிதி அனுசரணையின் கீழ் அமுல்படுத்திய கருத்திட்டத்திற்கு 2014/2015 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.மி. 5.5 ஆன தொகையை செலவிட அங்கீகரிப்பட்டிருந்தது.

மேற்படி தொகையில் 2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் ரூ.மி. 4,294,385/-ஆன தொகை 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்த வேண்டிய பணிகளுக்காக எஞ்சின. 2014 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் தொடர்ச்சியாக பின்வருமாறு அத்தொகை செலவிடப்பட்டது.

| தொடர் இல. | கருத்திட்டம் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| 01 | ஆய்வு | 824,190.00 |
| 02 | சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா | 1,890,000.00 |
| 03 | தரவுக் கட்டமைப்பைத் தயார் செய்தல் | 674,762.66 |
| 04 | செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஏனையன | 865,432.34 |
| | மொத்தம் | 4,294,385.00 |

## 5.20 சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக 2015 ஆம் ஆண்டு இந்தத் திணைக்களத்திற்கு அநாமதேய, எழுத்து மூலமான மற்றும் தொலைபேசி மூலமான 11084 முறைப்பாடுகள் கிடைத்ததுடன், இவ்வனைத்து முறைப்பாடுகளையும் அடுத்தகட்ட புலனாய்வு நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக பல்வேறு நிறுவனங்களிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு முறைப்பாட்டின் தன்மைக்கு அமைய பிரதேச செயலாளர் ஊடாக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர், பொலிஸ் சிறுவர், மகளிர் பணியகம், உரிய பொலிஸ் நிலையங்கள், தொழில் திணைக்களம், மாகாண நன்னடத்தைத் திணைக்களம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய முறைப்பாடுகளுக்குத் தேவையான அறிவுரைகள் தொலைபேசியில் வழங்கப்பட்டுள்ளது.

## 5.21 உலக சிறுவர் தினக் கொண்டாட்டம்

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இத்திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தது. இவற்றில் சிறுவர் கழகங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்காக நடாத்தப்பட்ட சிறுவர் கழகங்களுக்கு இடையிலான நாடகப் போட்டி முக்கியமானதாகும். பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் ஒரு நாடகக் குழுவினை மாவட்ட மட்டப் போட்டியில் பங்கேற்கச் செய்து மவாட்டத்தில் வெற்றியீட்டிய நாடகக் குழு தேசிய போட்டியில் பங்கேற்கச் செய்யப்பட்டது. மாவட்ட மட்டப் போட்டியின் நடுவர்களுக்காக, மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களை அச்சிடல் மற்றும் வேறு செலவினங்களுக்காக ரூபா 254,000 செலவிடப்பட்டது.

இலங்கைச் சமூகத்திலுள்ள ஒட்டுமொத்த சிறுவர்களையும் இலக்காகக் கொண்டு அவர்களின் அழகியற்கலைத் திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் பரிகல்பன எனும் சித்திரப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டது. ஆரம்ப, கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளின் கீழ் இப்போட்டி ஒழுங்குசெய்யப்பட்டது. இப்போட்டிக்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,049,957.20 செலவிடப்பட்டது.

அத்துடன் இதனை முன்னிட்டு, பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு தலைமைத்துவப் பயிற்சி, நாடக செயலமர்வுகள், ரசனைக்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள், சிறுவர் முகாம்கள், அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டடங்கள் போன்ற செயற்பாடுளும் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டன.

உலக சிறுவர் தின தேசிய வைபத்தை முன்னிட்டு பதுளை தலாவ கனிஷ்ட வித்தியாலயத்திற்கு புத்தகங்கள் வழங்குவதற்காக ரூபா 35,064.00 செலவிடப்பட்டது.

பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட மட்டத்தில் ரூபா ,142,227/- மற்றும் உலக சிறுவர் தின தேசிய விழாவுக்கு ரூபா 202,118/- உம் செலவிடப்பட்டது.

## சிறுவர் துஷ்பிரயோகம ○பற்றிய தகவல் அறிக்கையின் பொழிப்பு 2015

| தொடர் இல. | சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி அறிக்கையிடப்பட்ட முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாட்டின் மூலம் (புள்ளிவிபர ரீதியாக) | | | | மொத்த முறைப்ப○ாடுகளின் எண்ணிக்கை | தற்போதைய நிலைமை எண்ணிக்கை அடிப்படையில் | | | வேறு விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தலைமை அலுவலகம் ஊடாக | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஊடாக (1929) | தொலைபேசி அழைப்புக்களின் ஊடாக | ஏனையன | | நிரந்தர தீர்வு வழங்கல் | குறுங்கால தீர்வு வழங்கல் | வேறு நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் | |
| 1 | பாடசாலைக்கு அனுப்பாமை | 59 | 502 | 1155 | 4679 | 6395 | 3268 | 2244 | 818 | 65 |
| 2 | சிறுவயதுத் திருமணம் / சிறுவயதில் கர்ப்பமடைதல் | 07 | 22 | 136 | 341 | 506 | 52 | 168 | 277 | 09 |
| 3 | உடல் ரீதியான தண்டனை | 22 | 75 | 198 | 315 | 610 | 354 | 114 | 139 | 03 |
| 4 | உள ரீதியான துஷ்பிரயோகம் | 41 | 58 | 231 | 632 | 962 | 365 | 428 | 169 | 00 |
| 5 | சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் | 07 | 29 | 158 | 330 | 524 | 93 | 95 | 332 | 04 |
| 6 | பாரபட்சம் காட்டல் | 17 | 65 | 290 | 793 | 1165 | 445 | 582 | 134 | 04 |
| 7 | சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் | 03 | 27 | 54 | 82 | 166 | 105 | 29 | 32 | 00 |
| 8 | ஏனையன(குறிப்பிடுக) | 15 | 64 | 218 | 459 | 756 | 386 | 169 | 192 | 09 |
| | மொத்தம் | 171 | 842 | 2440 | 7631 | 11084 | 5068 | 3829 | 2093 | 94 |

### 5.22 பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்தல்

அச்சுறுல்லதான நிலைமையில் காணப்படுகின்ற சிறுவர்களுக்கு நீண்டகால பாதுகாப்பை உறுதி செய்யும் வேலைத்திட்டமாக பாதுகாப்புத் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் உபாயமுறையிலான முறையியல் ஒன்றாக இதன் தேவை எழுவது 2011 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் அச்சுறுத்தலான சிறுவர்களை இனங்காண்பதற்காக நடாத்தப்பட்ட ஆய்வில் பெருமளவு எண்ணிக்கையான சிறுவர்கள் இனங்காணப்பட்டதனாலாகும்.

இவ்வாறு இனங்காணப்பட்ட சிறுவர்களின் அச்சுறுத்தல் நிலைமைகள் பலதரப்பட்டவையாகும். அவர்களின் அச்சுறுத்தலான நிலைமைகளுக்கு அமைய மேற்படி அச்சுறுத்தல் நிலைமைகளைத் தவிர்த்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பாதுகாப்புத் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. இவை குறுங்கால அடிப்படையிலும், பல வருடங்கள் நீடிக்கின்ற நீண்ட கால அடிப்படையிலும் அமுல்படுத்தப்படுவதுடன், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

இந்தப் பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வது முதல் அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல் உட்பட சகல நடவடிக்களின் போதும் பிற வெளிக்கள அலுவலர்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் போது தனி நபரிலும் பார்க்க கூட்டான அணுகுமுறை ஊடாக செயற்படுவதன் முக்கியத்துவமும் இதனூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதன் மூலம் பிள்ளைக்குப் பாதுகாப்பும், அபிவிருத்தியும் கிடைப்பதுடன், குடும்பங்களும் கட்டியெழுப்பப்படுகின்றன. குறிப்பாக சிறுவர்களின் போசனை மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான குடும்பங்களின் வருமான வழிமுறைகளை மேம்படுத்தல், துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கல்வி நிலைமைகளை மேம்படுத்தத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றலும் கிடைத்துள்ளது.

### 5.23 தெற்காசிப் பிராந்தியத்தில் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுப்பதற்கான அமைப்புடன் இணைந்த கருத்திட்டம் - (SAIEVAC)

நிதி அனுசரணை – சார்க் அபிவிருத்தி நிதியம்

தெற்காசிய பிராந்திய சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான அமைப்பின் முன்னெடுப்புடன் பிராந்திய ரீதியாக சிறுவர்களுக்கு துன்புறுத்தல்கள் அற்ற சூழலை உருவாக்கும் நோக்கத்துடன், சார்க் அபிவிருத்தி நிதியத்தின் நிதி அனுசரணையின் கீழ் இலங்கைக்கு 2013 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் மேற்படி கருத்திட்டம் 2015 ஏப்ரல் வரை அமுல்படுத்தப்பட்டது. 2015 ஏப்ரல் மாதம் இந்தக் கருத்திட்டம் மற்றும் தெற்காசிய பிராந்திய சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான அமைப்பின் உள்நாட்டு ஒருங்கிணைப்புப் பணிகள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திடம் பொறுப்பளிக்கப்பட்டன. அதற்கமைய, இதுவரை அமுல்படுத்தப்படாதிருந்த சில செயற்பாடுகளுக்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் பிரேரிக்கப்பட்டு 2015 யூலை மாதம் சார்க் நிதியத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கேற்ப

அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சிறுவர் அலுவல்கள் பற்றிய இராஜாங்க அமைச்சினால் உரிய தொகைகள் 2015 செப்தெம்பர் மாதம் வழங்கப்பட்டன. இதன் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறாகும்.

- சிறுவர் பங்கேற்பு பற்றிய வழிகாட்டல்களை அச்சிடல் மற்றும் விநியோகித்தல்
- தெற்காசிய பிராந்திய சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுப்பதற்கான அமைப்புடன் தொடர்புடைய தேசிய செயல்ரீதியான ஒருங்கிணைப்புக் குழுவின் உபகருத்திட்டப் பிரேரணைக்கு அமைய அதற்கான துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை அச்சிடல்.
- சிறுவர் பங்கேற்பை பலப்படுத்துவதற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சிறுவர் கழகங்கள், சிறுவர் சபை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான சுவரொட்டிகளை அச்சிடல்

இந்தக் கருத்திட்டத்தின் முன்னேற்றம் :

திணைக்களத்திற்குக் கிடைத்த தொகை ரூபா 7,630,060.61

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போதான செலவினம் ரூபா 4,244,464.35